දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXI/03/2024

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය ) 2024/01/26
திகதி
Date )

**பொதுசுற்றுநிருபக் கடித இலக்கம் :- 02-13/2024**

மாகாண சுகாதார செயலாளர்கள்

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு

பணிப்பாளர - தேசிய வைத்தியசாலை, கண்டி

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

உரிய திணைக்கள தலைவர்களும்,

**சுகாதார அமைசசின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு- 2 சேவைத் தொகுதி (MN - 1 - 2006 (A)) சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினருக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2024 (முதலாம் தடவை)**

சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு- 2 சேவைத் தொகுதி (MN - 1 - 2006 (A)) சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் பொருட்டுதரம் III ற்குசேர்க்கப்பட்டு 03 வருடத்திற்கு முன்னர் சித்திபெற வேண்டிய முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை **2024/03/31** திகதி சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும் மொழியின் மூலம் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02. தகைமைகள் :-**

சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு- 02 சேவைத் தொகுதி (MN - 1 - 2006 (A)) சம்பளஅளவுத்திட்டதில் குறிப்பிடப்பட்டுள்ள (விடுதிக் காப்பாளர் /விடுதிக் காப்பாளர் (பெண்),உணவுபரிசோதகர் (பெண்), வரவேற்பாளர்,விடுதிஎழுதுநர், வாரப் துறைஉத்தியோகத்தர்,வாட்டுஎழுதுநர் (பெண்), கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசிஏற்றுபவர், மருந்துவிநியோகஉதவியாளர்கள்,தரம் III ற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் இதுவரை மேற்படிபரீட்சையில் சித்தியடையாத அலுவலர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.

**03 வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிலிருந்து விடுவித்தல்**

சுகாதார அமைச்சின் செயலாளர் 02-90/2015 (ii) பொதுசுற்றுநிருபகடித இலக்கமுடையதும், 2015.12.23 திகதியசுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமையமுதலாம் வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையில் இருந்து விடுவிப்புச் செய்யப்படக் கூடிய உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க தேவையில்லை.

**04. விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு **2024/02/29** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

அத்துடன விண்ணப்பப் அடங்கியுள்ள தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுகாதார அமைசசின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு- 2 சேவைத் தொகுதி **(MN - 1 - 2006 (A))** சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினருக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை— 2024 (முதலாம் தடவை)" என எழுதப்பட வேண்டும்.இந்த வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான அனைத்து தகமைகளையும் விண்ணப்பதாரி பூர்த்தி செய்துள்ளார் என ஆள்விபரக் கோவையை கையாளும் அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொருவிண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ளவிபரங்கள் சரியானவை எனநிறுவனத்தலைவரினால் சான்றுப்படுத்தப்படவேண்டியதும் கட்டாயமானதாகும்.தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. **110.00** பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட "9 x 4" அங்குல அளவுடைய கடித உறை ஒன்றும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்ப முடிவுத்திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள், பிழையான மற்றும் சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.**

**05. பரீட்சைக் கட்டணம்**

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

**06. பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்**

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணபதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணபித்துள்ள விண்ணபதாரிகளின் பொருட்டுபரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

07. பரீட்சைநடைமுறை

இப்பரீட்சை கட்டுரை வடிவிலான எழுத்துப்பரீட்சை ஒன்றாக இருப்பதுடன் அலுவலக நடைமுறை மற்றும் நிதிப்பிரமாணங்கள் எனும் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வினாத்தாளும் 02 மணித்தியாலங்களைக் கொண்டதாகும். 08வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100. பரீட்சார்த்திகள் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக்குறைந்தது 40% வீதமான புள்ளிகளைப் பெறல் வேண்டும்

08. பரீட்சை பாடத்திட்டம்

08.1. அலுவலக முறைமை வினாத்தாள்

தாபன விதிக்கோவை மற்றும் அரச சேவை ஆணைகுழுவின் அலுவலக ஒழுங்கு நடைமுறை விதிகளது கீழ் குறிப்பிடப்படும் அத்தியாயங்களின் படி அமைந்திருக்கும்.

- **தாபன விதிக்கோவையின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி**

| | | |
|---|---|---|
| ஆம் அத்தியாயம | VII - | வேதனம் |
| ஆம் அத்தியாயம | XII - | லீவு |
| ஆம் அத்தியாயம் | XIII - | புகையிரத ஆணைச்சீட்டு |
| ஆம் அத்தியாயம் | XIV - | உள்நாட்டினுள் கடமை தொடர்பிலான பிரயாணம் |
| ஆம் அத்தியாயம் | XXIV - | வேதனக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| ஆம் அத்தியாயம் | XXXII - | அரசியல் உரிமைகளைப் பிரயோகித்தல் |
| ஆம் அத்தியாயம் | XXVII - | கொடுக்கல் வாங்கல் தொடர்பு வழிமுறைகள் |
| ஆம் அத்தியாயம் | XXVIII - | நிர்வாக நடைமுறைகளும் செயன்முறைகளும் |
| ஆம் அத்தியாயம் | XLVII - | பொது நடத்தைகளும் ஒழுக்காறும் |

- **பொது சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 1589 /30 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப்பத்திரிகை**

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | III | -நியமனங்கள் |
| அத்தியாயம | V | -அரசாங்க சேவைக்கு நியமிப்பதற்கு தகுதியற்றவர்கள் |
| அத்தியாயம | VI | -நியமனங்கள் தொடர்பானநியதிகள் நிபந்தனைகள் |
| அத்தியாயம | VII | -நியமனம் தொடர்பான நடைமுறைகள் |
| அத்தியாயம | VIII | -தகுதிகூர்நிலை, செயற்படும்காலம், பதவியில் உறுதிப்படுத்தல் |
| அத்தியாயம | XIV | -நியமனத்தைமுடிவுறுத்தல் மற்றும் சேவையிலிருந்து இராஜினாமா பெறல் |
| அத்தியாயம | XV | -பதவியை வெறிதாக்கல் நிதி ஒழுங்குவிதிகள் |

08.2 நிதிப் பிரமாணங்கள

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | I | -செலவீடு மற்றும் வருமான மதிப்பீடு |
| அத்தியாயம | II | -செலவீடு, பதிவளித்தல், மீளளித்தல் என்பவற்றுக்கான அதிகாரம் |
| அத்தியாயம | III | -நிதி முகாமைத்துவம் மற்றும் பொறுப்புடமை |
| அத்தியாயம | IV | -பெறுகைகள் |
| அத்தியாயம | V | -கொடுப்பனவுகள் |

- அரசாங்க பெறுகை நடைமுறைகள்

09. பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் , இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் உள்ள சகல சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு- 02 சேவைத் தொகுதி (MN - 1 - 2006 (A)) சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ள பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட சகல அலுவலர்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களிடையே ஏதாவது ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுள்ளதாகும்.

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)II
செயலாளருக்காக

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

EXI

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

MN -01 (Grade III)

மாதிரி விண்ணப்பப் படிவம்

## சுகாதார அமைசசின் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் அல்லாத) பிரிவு - 2 சேவைத் தொகுதி (MN - 1 - 2006 (A)) சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினருக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2024 (முதலாம் தடவை)

**01** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் :

……………………………………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் : (தமிழில்) : ……………………………………………………

……………………………………………………………………………………

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி : ……………………………………………………………………

(ii) தரம் III ற்கு நியமிக்கப்பட்ட திகதி : ……………………………………………………

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ……………………………………………………

(iv) கையடக்க தொலைப்பேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(vi) மின்னஞ்சல் முகவரி ……………………………………………………………………

**02** தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√ ) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

அலுவலக நடைமுறை ☐ நிதி ஒழுங்கு விதிகள் ☐

**03** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் : ……………………………………………………

(ஆ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசின் கீழா ☐

அல்லது மாகாண சபையின் கீழா ☐

(இ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் ……………………………………………………

(ஈ) அதற்குரிய மாவட்டம் : ……………………………………………………

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் 01 விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ……………………………………

(ஊ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்) : ……………………………………………………

……………………………………………………………………………………

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ……………………………………

……………………………………………………………………………………

**04** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ……………………………………

05 (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..............................................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ......................................

| |
|---|
| முத்திரைக்கூண்டு |

---

## 06 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................. பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : .............................

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

## 07 திணைக்களத் தலைவரின் கையொப்பம்

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ...............................

.....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

---

## 08 நிறுவனத் தலைவரின் சான்றுரை

திரு / திருமதி / செல்வி ........................................................................................... இந்த நிறவனத்தில் ......................................................... அலுவலராக பணியாற்றுகின்றார் என்றும் விண்ணப்பத்தில் அவரினால் வழங்கப்ள விபரங்கள் சரியானது என்றும், அவர் இப்பரீட்சைக்கு முதற்தடவையான தோற்றுகின்றார் என்றும் அவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் விண்ணப்பதாரரின் சுயவிபரக் கோவையிலுள்ள விபரங்களுக்கு அமைய சரியானது என்றும் , என்முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் என்றும், பட்டுள சான்றுபடுத்துகின்றேன்.

திகதி: .............................................

.....................................................................
நிறுவனத் தலைவரின் ஒப்பம்
(இறபர் முத்திரை இடப்பட வேண்டும்)

---

## 09 பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................... என்பவர் எனது நிறுவனத்தில் ................................................................ உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................

........................................................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)